# பன்முக நோக்கில் பழமலய் கவிதைகள்

**நித்யஸ்ரீ . தி**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
https://orcid.org/0009-0005-1257-1454 , sivanithin99@gmail.com
**முனைவர் செ. மகேஸ்வரி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை , கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கே.கே.நகர்,சென்னை-78

ஆய்வுச்சுருக்கம்:-
ஈராயிரம் ஆண்டு தொன்மை கொண்ட தமிழ் கூறும் நல்லுலகு பல்லாயிரம் கணக்கான கவிஞர்களையும் படைபாளர்களையும் இந்த உலகிற்கு அடையாளம் காட்டியுள்ளது , அவர்களில் குறிப்பிடத்தக்கவர் தான் கவிஞர் த. பழமலய் அன்னாரின் தமிழ்த்தொண்டு, வாழ்வியல்,. அவரோடு கைப்பேசி வாயிலாய் கலந்துரையாடிய செய்திகள் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.
தரவுச்சொற்கள் : கவிஞர், பழமலய், புதிய ஆத்திச்சூடி

**முன்னுரை :-**
த.பழமலய் நம் அனைவராலும் கொண்டாடப்பட வேண்டிய ஒருவர். இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் ஆகப் பெரும் படைப்புகளை நமக்கு அளித்தவர் . அன்னாரின் படைப்புகள் யாவும் மண் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் சம உரிமை , சமத்துவம் போன்றவற்றை சார்ந்தும் அமைகின்றன.

**பிறப்பும் வாழ்வும் :-**
***"அனுபவங்கள் தாமே கவிதைகள்"*** என்று கூறும் கவிஞர் த. பழமலய். குழுமூர் என்னும் ஊரில் தங்கவேல் குஞ்சம்மாள் இணையாருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்தன. மூன்றாவது அமராவதி. ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று திருமுதுகுன்றம்(விருத்தாசலம்) பழமலைநாதர் கோவிலுக்குச் சென்று வரம் வேண்டி நான்காவது குழந்தையாகப் பிறந்தார் கவிஞர் த. பழமலய்.

தனது பள்ளிப்படிப்பினை அரசு பள்ளிகளிலும் கல்லூரி படிப்பினை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார், பின்னர் 1966 ஆம் ஆண்டு அரசு கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியராகப் பணியைத் தொடங்கினார் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் போன்ற இடங்களில் தமிழ் துறை பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிவகித்தார். பின்னர் 2001 ஆம் ஆண்டு பணி நிறைவு பெற்று இந்நாள் வரை தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தொண்டு செய்து வருகிறார். மக்கள் மொழியைக் கையாண்டு கவிதைகளை எழுதியுள்ளார். மருதநில மக்களின் வாழ்க்கையை வாழ்ந்து உணர்வுகளில் கவிதையாய் வெளிக்காட்டியவர். இளங்கலை பயிலும் காலத்திலேயே இவர் கவிதை எழுதும் உணர்வோடு எழுதத் தொடங்கி இன்று வரை கவிதை படைத்து வருபவர்.

கவிஞர் த. பழமலய் எழுத்தாளர்,மொழிபெயர்ப்பாளர், போராளி, படைப்பாளி,கவிஞர், பேராசிரியர் , திறனாய்வாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். இன்றும் அவர் அயராது இலக்கியப்பணி மற்றும் சமுதாயப்பணிகளை செய்துக் கொண்டே இருக்கிறார்.

**பழமலய்யின் ஊக்கப்படுத்தியவர்கள் :-**
*"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை*
*நில்லாது நீங்கி விடும்."*

**திருக்குறள்(592).**

ஒருவருக்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமை ஆகும். மற்ற பொருளுடைமையானது நிலைபேரு இல்லாமல் நீங்கி விடுவதாகும் என்ற குறளுக்கு ஏற்ப பழமலய் அவர்களின் வாழ்விலும் பல ஊக்குவிப்பாளர்கள் இருந்துள்ளனர். குறிப்பாக அவர் படித்த நூல்களின் வாயிலாய் அவருக்கு அறிமுகமான பல எழுத்தாளர்கள் அவரின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளார்கள் என்பதை அகமகிழ்வுடன் தெரிவிக்கிறார்.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது கணித ஆசிரியர் வே.சபாநாயகம் என்பவர் ஆனந்தவிகடன் இதழ்களில் சிறுகதை எழுதி வந்தார். பள்ளியில் "கையெழுத்து ஏடு" நடத்தப்படும். அதில் என் கவிதைகளைப் பார்த்து ஊக்கம் அளித்து பாராட்டினார் பேராசிரியர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மு.அண்ணாமலை அவர்கள் பாரதிதாசன் பரம்பரை வழி வந்தவர்கள். சிற்பி ,நெடுமாறன் முதலானவர்களின் படைப்புகளைப் படித்த இவர், கவிதை எழுதும் ஆர்வம் வந்தது . .அவரின் புதுமை வரிகள் போன்று என் கவிதைகளும் இடம் பெற வேண்டும் என்று உறுதிக்கொண்டதாக அக மகிழ்வுடன் தெரிவிக்கிறார் கவிஞர் பழமலய். பொற்கோ, கோவைஞானி ,பல்லடம்மாணிக்கம் ஆகியோர் தன்னை அடையாளம் கண்டு ஊக்கம் அளித்தனர் என்று கூறுகிறார். இன்றும் இவருக்கு ஊக்கம் அளித்து பாராட்டித் தோழமை கொள்பவர்கள் பலர் உள்ளனர்.

**படைப்பாக்க சிந்தனைகள் :-**

கவிஞர் த.பழமலய் மக்கள் மொழியை கையாண்டுள்ளார்.எளிமையாகப் படிப்பதற்கும் ஆழமாக பொருள் உணர்த்தக் கூடியவை இவரின் கவிதைகள் .இயற்கை, பெண்கள், தேசிய இனத்தினர், நதி, தோழமைப் பற்றிய படைப்புகளை கவிதையின் மூலம் எழுதியுள்ளார். த.பழமலய்கவிதைகள் என்ற கவிதைத்தொகுப்பு நூலைத் தொகுத்துத் தந்த பேராசிரியர். சு.சண்முகசுந்தரம் இந்நூல் உரைகளைத் தொகுத்து நோக்குகையில் "ஒரு நிறைவை"உணர முடிகிறது,

"அதிசயமாய்,...... அற்புதமாய்,.....ஆதிமூலம்

தேடித்துழாவும் இந்த புதுாவு எழுத்து" என்ன அனாயாசமாய் கைவந்திருக்கிறது பழமலய்க்கு என்று தொகுப்பாசிரியர் உரையில் எடுத்துரைப்பது அவரின் படைப்பாளுமைக்கு அழகுதரும் சொற்களாகும்.

கவிஞர் சொந்தங்கள் பற்றிய செய்திகள் பல கவிதைகள் எழுதியுள்ளார். நம் வாழ்வில் நிகழும் அனைத்து உறவுகள் செய்யும் செயல்பாடுகளைப் படம் பிடித்திருக்கிறார் த.பழமலய்.

***"ஏன் இந்த வாழ்க்கை? எப்படி இந்த வாழ்க்கை?"*** என்று வினாவை எழுப்புகிறார் "குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்" கவிதையின் மூலம் பேசுவதை உணரலாம்.

இந்தப் பயிற்சிகளை நான் சாதனைகளாகவே நம்புகிறேன் . கலை இலக்கியத்தில் சாதனைகள் என்பவை தொடர்ந்து பயிற்சிகள் தாம் .பயிற்சி எது, சாதனை எது , எனவெல்லாம் கூடப் பிரிப்பதற்கு இடம் தராதவை நேர்மையான படைப்பு முயற்சிகள் " என்று (முன் நிலவு காலத்தில் )கூறுகிறார். கவிஞரின் ஒவ்வொரு படைப்புகளிலும் இறுதியில் நாள்,இடம் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

**கவிநயம் :-**

மருத நிலத்தில் நிகழும் வாழ்க்கைப் புலத்தை தனது கவிதைகளின் வெளிப்படுத்தியிருக்கிறார் கவிஞர். ஆழ புரிதலோடு கவிதை எழுதும் கவிஞர் த. பழமலய். "ஓசை இல்லாத பறவை" என்ற தலைப்பில் வண்ணப் பறவைகளைக் காண்பதற்கு வளர்த்திருக்கிறேன் மரங்கள் என்று எழுதியுள்ளார்.

***"உழுகிற மாடும் உள்ளூர்***
***மருமகனும் ஒன்று"....***

**( நெல்மருட்டி ).**

***"உரிமைக்குப் போராடு பாப்பா - நீ***
***ஓய்ந்திருக்க லாகாது பாப்பா..."***

**(துப்பாக்கிகாரனின் புல்லாங்குழல்).**

***"ஊர் மறந்து புத்தரை:***
***நான் நினைத்துப் போனேன்***
***அம்பேத்கர் காலனி ..."***

**(சனங்களின் கதை).**

***"வெறும் இலைகள்:***
***கேட்டதில்லை நீங்கள்***
***நிறங்கள் வழங்கும்***
***இன்னிசை நிகழ்ச்சி..."***

**(குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்).**

***"விழிப்பு என்பது***
***விழித்திருப்பது அல்ல:***
***இருளில் இல்லாமல் இருப்பு.."***

**( இவர்கள் வாழ்ந்தது).**

மேற்குறித்த கவிதை வரிகளில் இயற்கையை நேசிப்பது மட்டுமெல்லாமல் உரிமைகளை பெற்றிடுவதற்குப் போராட வேண்டும் என்றும் சமூகத்திற்கு அரைகூவல் விடுக்கிறார்.

புதிய ஆத்திச்சூடி: **ஔவையார் , பாரதியார் எழுதிய புதிய ஆத்திச்சூடியைப் போன்று கவிஞர் பழமலய் அவர்களும் புதிய ஆத்திச்சூடியின் மூலம் அறியக் கருத்துகளை உணரலாம்**

***அம்பேத்கர் அறி***
***ஆண்பெண் சரிநிகர்***
***இடஒதுக்கீடு கொள்***
***ஈவெரா படி***
***உழவோம் உயர்த்து***
***ஊரைத் தமிழ்செய்***
***எட்டாதது இல்லை***
***ஏற்றம் மாஓ சேதுங்***
***ஒதுங்குதல் ஒழி***
***ஓங்குதல் புரட்சி***

இதுபோன்று பல கவிதைகள் அன்னாரின் கவிவண்ணத்தால் உதிர்ந்தவை. இவர் ஒருபொழுதும் புத்தகங்களை இலாப நோக்கிற்காக வெலியிட்டது கிடையாது, தன் உள்ள கருத்துக்களை மக்களோடு பகிர்ந்து கொள்ளவே புத்தகங்களை வெளியிட்டார்.

பழமலய் படைப்புகள் :-

கவிஞர் த. பழமலய் பல கவிதைகள் எழுதியுள்ளார் அவைகள் பின்வருமாறு

- சனங்களின் கதை
- குரோட்டன்களோடு கொஞ்ச நேரம்
- இவர்கள் வாழ்ந்தது
- இன்றும் என்றும்
- முன் நிலவுக்காலம்
- புறநகர் வீடு
- இரவுகள் அழகு
- வேறு ஒரு சூரியன்
- கொனாரக் பாட்டியின் ஊன்றுகோல்
- துப்பாக்கிகாரனின் புல்லாங்குழல் பாடல்கள்
- நாங்கள் பாடினோம்

- சிவப்பு வரலாறு

இவரின் மொத்த கவிதைகளையும் தொகுத்து பழமலய் கவிதைகள் என்று புத்தகம் வெளியிட்டுள்ளனர். இவர் கவிதை மட்டும் இல்லாமல் கட்டுரை நூல்களையும் இயற்றியுள்ளார்.

- அண்ணன் குப்புசாமி இன்னும் ஆழமானவர்
- நரபலி: தெய்வங்கள், திருவிழாக்கள்
- திருக்குறளார் வீ.முனிசாமி வாழ்வும் பணியும்
- பாம்புகள் மற்றும் சில கவிதைகள்
- தெரியாத உலகம்
- மானுடவியல் கவிதைகள்
- தருமபுரி மண்ணும் மக்களும்
- கற்பும் தமிழ்ப் பண்படும்
- எதிர்வினை

இதுபோன்று பல கவிதை மற்றும் கட்டுரை தொகுப்புகளை வெளியிட்டு தமிழ் அன்னைக்கு அணி செய்துள்ளார்.

**விருது:**

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது போல இக்கவிஞருக்குச் சென்ற இடமெல்லாம் விருதும் பாராட்டும் கொடுத்து மகிழ்ந்திருப்பதை அறியலாம்.

- தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை வழங்கிய கி.ஆ.பெ. விசுவநாதம் விருது
- தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை வழங்கிய ,முத்தமிழ் காவலர் விருது
- கவிமணி நினைவு பரிசு
- கண்ணதாசன் தாயார் நினைவு பரிசு
- சிற்பி இலக்கிய விருது
- பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளையின் பாராட்டு.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒருங்கிணைத்த பன்னாட்டு மாநாட்டில் வழங்கப்பட்ட "வாழ்நாள் சாதனையாளர்" விருது.

முதலான விருதுகளை அளித்து பலரும் இவரை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

**கவிஞர் பழமலய் அவர்களோடு கைப்பேசி உரையாடல் :-**

இந்தக் கட்டுரைக்காக ஐயாவை தொடர்பு கொண்டு பேசும் வாய்ப்புக் கிடைத்தது.அப்போது பல அறிய கருத்துகளையும் செய்திகளையும் என்னோடு பகிர்ந்துக் கொண்டார் அதனை நான் உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன் .

ஆய்வாளர் :- அவரிடம் நான் ' தங்களுக்கு கவிதை எழுதும் ஆசையும் ஆர்வமும் எப்பொழுது ஏற்ப்பட்டது ' என்று கேட்டேன் .

கவிஞர்:- ஐயா அதற்கு ' நான் 12 வயது இருக்கும் போது நூலகம் சென்று பாரதியார், பாரதிதாசன் கவிமணி இவர்களின் கவிதைகளை படிக்கும் பொழுது ஆசையும் ஆர்வமும் வந்தது ' என்று குறிப்பிட்டார்.

ஆய்வாளர்: அவரிடம் ' உங்கள் வீட்டில் ஏராளமான கல்வெட்டுகள் இருப்பதாக கேள்விப்பட்டேன் அது பற்றி கூறுங்கள் ஐயா '

கவிஞர் : அதற்கு அவர் ' தமிழ் உலகு வரலாற்றை பதிவு செய்வதில் காலந்தோறும் சற்று தயக்கம் காட்டியே வருகின்றனர். சம கால எழுத்தாளர்களோடு உரையாடும் பொழுது இது குறித்து பேசினோம் அப்பொழுது ஒரு சிலர் நம் படைப்புகளையும் நம் குறிப்புகளையும் கல்வெட்டுகளாய் நம் இல்லங்களில் உருவாக்க வேண்டும் என்றனர், முதன் முதலில் கவிஞர் சுரதா அவர்களின் மருமகன் வீட்டில் கல்வெட்டுகள் எழுப்பப்பட்டன அதன் பின் நானும் என் வீட்டில் எனது படைப்புகளை குறித்து கல்வெட்டுகள் எழுதினேன் '.

 ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

ஆய்வாளர்: மேலும் ஐயாவிடம் ' புதிய எழுத்தாளர்கள் எவை எல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள் ' என்று கேட்டேன்

கவிஞர்:. ஐயா அதற்கு 'மிக நீண்ட வாசிப்பும் தேடலும் மிகவும் அவசியம் அதுமட்டுமின்றி எழுத்தாளர்கள் தன் மண் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் சூழலியல் சார்ந்தும் படைப்புகளை படைப்பது சால சிறந்தது ' என்றார்.

ஐயாவிடம் பேசிய அந்த சில மணித்துளிகள் எனக்கு மிகவும் ஊக்கமுடையதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது . ஐயாவின் கருத்துக்களை முழுமையாக என்னால் இந்த கட்டுரையில் சுருக்கி விட இயலவில்லை, ஐயா ஒரு காவியம் அவரை ஆழ்ந்து படித்தல் இன்றியமையாதது .

**முடிவுரை :-**

மிக சிறந்த கவிஞனாய் நம்மிடையே வளம் வரும் த.பழமலய் சிறுவயதில் இருந்தே கவிதைகளைப் படைத்து இருபத்தோராம் நூற்றாண்டின் ஒரு விருட்சமாய் மருத நில மக்களுக்கு இருக்கிறார். தமிழ்த்தொண்டு,சமூகப்பணி ,விருதுகள் மற்றும் இவரின் கவிநயம் போன்றவை இக்கட்டுரையில் எடுத்துரக்கப்பட்டுள்ளது.

**விதைக் கொண்டு**
**விருட்சம் ஆகுங்கள்..**

துணை நூல் பட்டியல் :-

பழமலய் கவிதைகள் - தொகுப்பாசிரியர்: பேரா. முனைவர் சு. சண்முகசுந்தரம் - காவியாப்பதிப்பகம்- 2019.

திருக்குறள் : மு. வரதராசன் உரை - பாரி நிலையம்- 2014